சுருக்கம்

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை – தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் நல வாரியம் மற்றும் புதிதாக அமைக்கப்பட்ட 12 நல வாரியங்கள் – சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத்திட்டங்களில் கல்வி உதவி, மகப்பேறு உதவி மற்றும் ஈமச்சடங்குச் செலவு உதவி ஆகிய நல உதவித் திட்டங்களுக்கு ஒப்பளிப்பு வழங்குதல், பட்டுவாடா செய்தல் ஆகிய பணிகளை தொழிலாளர் துறையின் மாவட்ட அளவிலான சார்நிலை அலுவலர்களுக்கு அதிகாரப்பகிர்வு வழங்குதல் ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (ஐ1) துறை

அரசாணை (நிலை) எண்.199 நாள்: 08.10.2007

படிக்கப்பட்டது:-

1.	அரசாணை (நிலை) எண். 73, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்(ஐ1)துறை, நாள் – 01.09.2006.
2.	அரசாணை (நிலை) எண். 74, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்(ஐ1)துறை, நாள் – 01.09.2006.
3.	அரசாணை (நிலை) எண். 77, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்(ஐ1)துறை, நாள் – 01.09.2006.
4.	அரசாணை (நிலை) எண். 78, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்(ஐ1)துறை, நாள் – 01.09.2007.
5.	அரசாணை (நிலை) எண். 79, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்(ஐ1)துறை, நாள் – 01.09.2007.
6.	அரசாணை (நிலை) எண். 80, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்(ஐ1)துறை, நாள் – 01.09.2007.
7.	அரசாணை (நிலை) எண். 81, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்(ஐ1)துறை, நாள் – 01.09.2007.
8.	அரசாணை (நிலை) எண். 82, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்(ஐ1)துறை, நாள் – 01.09.2007.
9.	அரசாணை (நிலை) எண். 83, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்(ஐ1)துறை, நாள் – 01.09.2007.
10.	அரசாணை (நிலை) எண். 84, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்(ஐ1)துறை, நாள் – 01.09.2007.
11.	அரசாணை (நிலை) எண். 85, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்(ஐ1)துறை, நாள் – 01.09.2007.
12.	அரசாணை (நிலை) எண். 86, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்(ஐ1)துறை, நாள் – 01.09.2007.
13.	அரசாணை (நிலை) எண். 87, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்(ஐ1)துறை, நாள் – 01.09.2007.

14.	அரசாணை (நிலை) எண். 88, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்(ஐ1)துறை, நாள் – 01.09.2007.
15.	அரசாணை (நிலை) எண். 12, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்(ஐ1)துறை, நாள் – 21.01.2007.
16.	அரசாணை (நிலை) எண். 49, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்(ஐ1)துறை, நாள் – 16.03.2007.
17.	சென்னை, தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் நல வாரியச் செயலாளரின் கடிதங்கள் எண். எம்4/1616/டிஎன்எம் டபிள்யுபி/ 2007, நாள் – 18.06.2007 மற்றும் 16.08.2007.
18.	சென்னை, தொழிலாளர் ஆணையரின் கடிதம் எண். செ3 / 34086 / 2007, நாள் – 29.06.2007.

ஆணை:-

மேலே 1, 2 மற்றும் 15–ல் படிக்கப்பட்ட அரசாணைகளின் மூலம் ஏற்கனவே இயங்கி வரும் தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் நல வாரியத்துடன் கீழ்கண்ட நல வாரியங்கள் அமைக்கப்பட்டு, அமைப்புசாரா தொழிலாளர்களக்கான சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத்திட்டங்கள் மேலே 2 முதல் 14 வரை மற்றும் 16–ல் படிக்கப்பட்ட அரசாணைகளில் வெளியிடப்பட்டுள்ளன;

1) தமிழ்நாடு ஆட்டோ ரிக்ஷா மற்றும் வாடகை ஊர்தி ஓட்டுநர் நல வாரியம்.
2) தமிழ்நாடு சலவைத் தொழிலாளர் நல வாரியம்.
3) தமிழ்நாடு தையல் தொழிலாளர் நல வாரியம்.
4) தமிழ்நாடு கைத்தறி மற்றும் கைத்தறிப்பட்டு நெசவு தொழிலாளர் நல வாரியம்.
5) தமிழ்நாடு கைவினைத் தொழிலாளர் நல வாரியம்.
6) தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர் நல வாரியம்.
7) தமிழ்நாடு மண்பாண்டத் தொழிலாளர் நல வாரியம்.
8) தமிழ்நாடு முடித்திருத்துவோர் நல வாரியம்.
9) தமிழ்நாடு காலணி, தோல் பொருள் உற்பத்தி மற்றும் தோல் பதனிடும் தொழிலாளர் நல வாரியம்.
10) தமிழ்நாடு ஓவியர்கள் நல வாரியம்.
11) தமிழ்நாடு பொற்கொல்லர் நல வாரியம்.
12) தமிழ்நாடு வீட்டுப் பணியாளர் நல வாரியம்.

மேற்குறிப்பிட்ட நல வாரியங்கள் மூலம் கீழே குறிப்பிட்டுள்ள நல உதவித் திட்டங்கள் வழங்கப்பட்டு வருகின்றன:–

1) தனி நபர் விபத்து துயர்துடைப்பு உதவி,
2) ஓய்வூதியத் திட்டம்
3) ஈமச்சடங்குச் செலவு ஈட்டுதவி,
4) இயற்கை மரணத்திற்கான உதவி,
5) மகன் அல்லது மகளின் கல்விக்கான உதவி

6) திருமண உதவி
7) மகப்பேறுகால உதவி,
8) கண்கண்ணாடிச் செலவு ஈட்டுதவி

2. மேலே 17–ல் படிக்கப்பட்ட, கடிதத்தில் தற்சமயம் அமைப்புசாரா நல வாரியங்களில் பதிவு செய்த தொழிலாளர்கள் தங்களது நலத்திட்ட உதவி கோரும் விண்ணப்ப மனுக்கள், சம்மந்தப்பட்ட தொழிலாளர் உதவி ஆய்வாளர்களால் பெறப்பட்டு, அவைகளை சரிபார்த்து, தகுதியுள்ள விண்ணப்பங்களை வாரியத் தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி, உதவித் தொகைகள் வாரியத் தலைமை அலுவலகத்தின் மூலம் வழங்கப்படுகிறது. என்றும், இதனால் பெருமளவில் கோரிப் பெறப்படும் குறிப்பிட்ட நல உதவிக்கான பயனாளிகளை உதவித் தொகைகள் சென்றடைவதில் காலதாமதம் ஏற்படும் வாய்ப்புள்ளது என்றும், தற்சமயம் அமைப்புசாரா தொழிலாளர்கள் மற்றும் தொழிலாளர் நல அமைப்புகளின் விழிப்புணர்வு காரணமாக அதிக எண்ணிக்கையில் தொழிலாளர் பதிவு செய்யப்பட்டு வருகின்றனர் என்றும், அவர்களிடமிருந்து வாரிய திட்டப்பயன்கள் கோரி அதிக எண்ணிக்கையில் மனுக்கள் பெறப்பட்டு வருகின்றன என்றும், நலத்திட்டப் பயன்கள் தொழிலாளர்களையும் அவர்களது பயனாளிகளையும் விரைவில் சென்றடைய நலத்திட்ட உதவிகளில் கல்வி உதவி, மகப்பேறு உதவி, மற்றும் ஈமச்சடங்கு செலவு உதவி ஆகிய மூன்று நலத்திட்டங்களை செயல்படுத்த சார்நிலை அலுவலர்களுக்கு அதிகாரப்பரவல் செய்வது தேவையாக இருப்பதாகவும், தெரிவித்து மேற்கூறப்பட்டுள்ள மூன்று உதவித் தொகைகளை வழங்குவதற்கான அதிகாரப் பரவாலாக்கம் குறித்த கருத்துருவினை தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் நல வாரியச் செயலாளர், அரசுக்கு அனுப்பியுள்ளார். மேற்குறிப்பிட்ட கருத்துரு 14.06.2007–ல் நடைபெற்ற தமிழ்நாடு உடலுழைப்பு தொழிலாளர் நல வாரியக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு, இதனை அரசின் முடிவுக்கு விடலாமென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

3. தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் நல வாரிய செயலாளரின் அதிகாரப்பரவல் குறித்த கருத்துருவிற்கு ஒப்புதல் வழங்குமாறு, மேலே 18–ல் படிக்கப்பட்ட கடிதத்தில் தொழிலாளர் ஆணையர் அரசுக்கு பரிந்துரைத்துள்ளார்.

4. தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் நல வாரியச் செயலாளரின் கருத்துரு மற்றும் அதன் மீதான தொழிலாளர் ஆணையரின் பரிந்துரை அரசால் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது. மேற்கூறப்பட்டுள்ள 13 நல வாரியங்களால் செயல்படுத்தப்பட்டு வரும் நல உதவி திட்டங்களில் ஈமச்சடங்கு உதவி, கல்வி உதவி மற்றும் மகப்பேறு உதவி ஆகிய மூன்று வகையான நல உதவிகளை பயனாளிகளுக்கு ஒப்புதல் அளிக்கும் அதிகாரத்தை மண்டல தொழிலாளர் தணை ஆணையர்களுக்கும் அதனைப் பட்டுவாடா செய்யும் அதிகாரத்தை மண்டல தொழிலாளர் அலுவலர் ஆகியோர் இணைந்து செயல்படுத்தவும் கீழ்கண்டவாறு அதிகாரப்பகிர்வு செய்து அரசு ஆணையிடுகிறது.

அ. மேற்குறிப்பிட்ட மூன்று உதவித் தொகை கோரும் விண்ணப்பங்கள் தொழிலாளர் உதவி ஆய்வாளர்கள் மூலம் தற்சமயம் பெறப்படுவது போன்று தொடர்ந்து பெறப்பட வேண்டும். அதில் தகுதியில்லாத விண்ணப்பங்கள் தொழிலாளர் உதவி ஆய்வாளர்களால் விண்ணப்பதாரருக்கு திருப்பி அனுப்பப்படும். தகுதியான விண்ணப்பங்கள், ஆராயப்பட்டு தகுந்த அறிக்கை மற்றும் பரிந்துரையுடன் சம்மந்தப்பட்ட மண்டல தொழிலாளர் துணை ஆணையரின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட வேண்டும்.

ஆ. தகுதியான விண்ணப்பங்கள் மண்டல தொழிலாளர் துணை ஆணையர்களால் பரிசீலக்கப்பட்டு, உதவி வழங்குவதற்கான ஒப்பளிப்பு ஆணை வழங்கப்படும். இப்பணியின் காரணமாக இவர்களது பதவிப்பெயர் வாரிய துணைச் செயலாளர் (அலுவலால்) என்றழைக்கப்படும். மண்டல தொழிலாளர் துணை ஆணையர் / வாரியத் துணைச் செயலாளரால் ஒப்பளிக்கப்பட்ட உதவித் தொகை மாவட்டத்தின் தொழிலாளர் அலுவலர் (Labour Officer) மற்றும் மாவட்ட வாரிய கண்காணிப்பாளர் மூலமாக சம்மந்தப்பட்ட பயனாளிக்கு பண அஞ்சல் / காசோலை மூலமாக வழங்கப்படும் இதன் பொருட்டு தொழிலாளர் அலுவலர்கள் வாரிய சார்புச் செயலாளர் (அலுவலால்) என்றழைக்கப்படுவர்.

இ. ரூ. 5000/– வரையான உதவித் தொகை பண அஞ்சல் மூலமாக அனுப்பப்படும் அதற்கான பண அஞ்சல் கமிஷன் தொகை முதல் தடவை வாரியம் ஏற்கும் அந்த பண அஞ்சல் பட்டுவாடா செய்யப்படாமல் திரும்ப பெறப்பட்டால், இரண்டாவது தடவை உதவித் தொகை அனுப்புவதற்கான பண அஞ்சல் கமிஷன் தொகை மனுதாரரால் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

ஈ. மாவட்டத்திலுள்ள மண்டல தொழிலாளர் துணை ஆணையர் ஒவ்வொரு வாரமும் இறுதி வேலை நாளில் உதவித் தொகை வழங்கப்பட்ட விவரங்களை வாரியத் தலைமை அலுவலகச் செயலாளருக்கு அனுப்ப வேண்டும்.

உ. மாவட்டந்தோறும் அனைத்து 13 நல வாரியங்களுக்கு ஒரே வங்கிக் கணக்கை வைத்துக் கொண்டு, வாரியத்திலிருந்து வழங்கப்படும் நல உதவிகளின் கணக்கு விவரத்திற்காக (Accounting) ஒவ்வொரு வாரியத்திற்கும் தனி பேரேடு / கணக்கு பராமரிக்க வேண்டும்.

ஊ. தொழிலாளர் துணை ஆணையர் அளவிலும் தொழிலாளர் அலுவலர் அளவிலும் வாரியங்கள் மாவட்ட அலுவலக அளவிலும் செயல்படுத்தப்படும் நெறிமுறைகள் மற்றும் பராமரிக்க வேண்டிய ஆவணங்கள் குறித்து வாரியங்களின் கட்டுப்பாட்டு அதிகாரி என்ற முறையில் தொழிலாளர் ஆணையர் உரிய அறிவுரைகள் வழங்கவும், இவ்வதிகாரப் பரவலால் சமூக பாதுகாப்பு மற்றும் நலத்திட்டங்களில் திருத்தங்கள் ஏதேனும் செய்யத் தேவையிருப்பின் உரிய செயற்குறிப்புகளை சமந்தப்பட்ட வாரியச் செயலாளர்கள் அரசுக்கு அனுப்புமாறும் அறிவுறுத்தப்படுகின்றனர்.

5. மேற்குறிப்பிட்ட அதிகார்ப்பகிர்வு (Decentralization) ஆணைகள் இந்த அரசாணை வெளியிடப்பட்ட நாளிலிருந்து அமலுக்கு வரும்.

6. இந்த அரசாணை நிதித்துறை இசைவுடன் வெளியிடப்படுகிறது. அ.சா.கு.எண். 65669 /தொ(ம) வே / 2007, நாள் – 08.10.2007.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஞா. சரோஜா,
அரசு கூடுதல் செயலாளர்.

பெறுநர்:

தொழிலாளர் ஆணையர், சென்னை–600 006.
தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர், சென்னை – 600 005.
செயலாளர், தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்நல வாரியம், சென்னை – 102.
செயலாளர், தமிழ்நாடு வீட்டுப்பணியாளர் நல வாரியம், சென்னை – 102.
செயலாளர், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியம், சென்னை – 600 034.
அனைத்து மண்டல தொழிலாளர் துணை ஆணையர்கள் (தொழிலாளர் ஆணையர் மூலமாக)
அனைத்து மாவட்ட வாரியக் கண்காணிப்பாளர்கள் (தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் நல வாரியச் செயலாளர் மூலமாக)
அனைத்து தொழிலாளர் அலுவலர்கள், (தொழிலாளர் ஆணையர் மூலமாக) ஹ
தலைமை (கணக்காயர்) சென்னை – 18
தலைமை கணக்காயர் (ஆய்வு) சென்னை – 18
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், (தெற்கு) சென்னை–600 035.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், (வடக்கு) சென்னை–600 001.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், (தெற்கு) சென்னை–600 005.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், மதுரை.

நகல்:–

அனைத்துத்துறைகள், சென்னை – 9
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்
மாண்புமிகு அமைச்சர் அவர்களின் சிறப்பு தனி உதவியாளர், சென்னை – 9.
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறைச் செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை – 9.
தமிழ்நாடு தகவல் ஆணையம், சென்னை – 600 018.

// உண்மை நகல் //

பிரிவு அலுவலர்.